பக்கங்கள் 16+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 09 வெள்ளிக்கிழமை 23.01.2026 | அதிர்வு 177

## சட்டமா அதிபரை பதவி நீக்குவது பற்றி ஆராயப்படவில்லை!

**நீதி அமைச்சர் தெரிவிப்பு**

“சட்டமா அதிபரை பதவி நீக்குவது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை.” – என்று 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# பாதாளக் குழுக்கள், போதை மாபியாக்கள் இந்த ஆட்சியில் அடியோடு ஒழிக்கப்படுவர்

## குற்றவாளிகளுடன் கைகோர்த்த அரசியல்வாதிகளும் தப்ப முடியாது என்று நீதி அமைச்சர் கடும் எச்சரிக்கை

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில், பாதாள உலகக் குழுக்களுக்கும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கும் அடியோடு முடிவு கட்டப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார். மேலும் குற்றவாளிகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில், 04






# தயாசிறி உண்மையான பௌத்தனாக இருந்தால் என் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும்!

## நாடாளுமன்றத்தில் சிறீதரன் ஆவேசம்

”நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஒரு சரியான சிங்கள பௌத்தனாக இருந்தால் நான் மோசடியில் ஈடுபட்டுள்ளேன் என்று குறிப்பிட்டமையை நாடாளுமன்றத்தில் நிரூபிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.” - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார் .

சூரிய மின்சக்தி திட்டத்துக்காக 70 மில்லியன் ரூபாவை மோசடியாக சிறீதரனின் வங்கிக் கணக்கிலும், மகன் சாரங்கனின் கணக்கிலும் வைப்பிலிட்டுள்ளதாக நேற்று நாடாளுமன்றத்தில் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தார். 04

# அரசமைப்பு கவுன்ஸிலிலுக்கு மூன்று புதிய உறுப்பினர்கள்

அரசமைப்பு கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளின் பதவிக்காலம் சில தினங்களுக்கு முன்னர் காலாவதியான நிலையில் அந்த இடத்துக்கு மூவர் நியமனம் பெற்று இருக்கின்றனர்.

இது தொடர்பில் பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் இன்று நடைபெற்ற அரசமைப்பு கவுன்ஸில் கூட்டத்தில் இணக்கம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

அதன்படி ஒஸ்ரின் பெர்னாண்டோ, ரஞ்சித் ஆரியரட்ன, பேராசிரியர் வசந்தா சேனவிரட்ன ஆகியோர் சிவில் சமூகத்தின் சார்பில் புதிய உறுப்பினர்களாக அரசமைப்பு கவுன்ஸிலுக்கு நியமனம் பெறுகின்றனர்.

# வடக்கு மாகாண வளர்ச்சிக்கு அழைப்பு முதலீட்டாளர்களை வரவேற்கின்றோம்

## ‘யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி’ தொடக்க விழாவில் ஆளுநர் தெரிவிப்பு














**(எஸ்.நிதர்ஷன்)**

“வடக்கு மாகாண இளையோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி, இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பை அதிகரிக்க முன்வருமாறு அனைத்து முதலீட்டாளர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் வர்த்தகப் பெருவிழாவான “யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி – 2026“, 16 ஆவது ஆண்டாக இம்முறை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

“வர்த்தகக் கண்காட்சிகள் என்பவை வெறும் பொருட்காட்சிகள் மட்டுமல்ல. அவை பொருளாதார வளர்ச்சியின் இயந்திரங்களாகும். புதிய கூட்டுப் பங்காண்மைகளுக்கான கதவுகளைத் திறப்பதன் மூலம் இவை முதலீடுகளைத் தூண்டுகின்றன. சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு அங்கீகாரத்தையும், தன்னம்பிக்கையையும் வழங்கி வலுவூட்டுகின்றன.

விவசாயம், கடற்றொழில், கைவினைப் பொருட்கள் அல்லது தொழில்நுட்பம் என யாழ்ப்பாணத்தின் தனித்துவமான தயாரிப்புகள் உலகளாவிய பார்வையாளர்களைச் சென்றடைவதை உறுதி செய்து, பிராந்திய அபிவிருத்தியை இக்கண்காட்சி பலப்படுத்துகின்றது.

எதிர்காலத்தை நோக்கிய எமது பயணத்தில், எமது கைத்தொழில்கள் உலக சந்தையில் போட்டியிடக்கூடிய வகையில் அமைவதற்கு, ‘டிஜிட்டல் மாற்றத்தை’ நாம் அரவணைத்துக்கொள்ள வேண்டும். அதேவேளை, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நிலையான நடைமுறைகளில் முதலீடு செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் அடுத்த கட்ட சுபீட்சத்தை வடிவமைக்கவுள்ள எமது இளைஞர்கள் மற்றும் பெண் தொழில்முனைவோரை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். முன்மொழியப்பட்டுள்ள “வடக்கு வணிக சம்மேளனங்களின் இணையம்“ எதிர்காலத்தில் எமது பொருளாதார அபிவிருத்தியில் மிக முக்கிய பங்காற்றும் என நான் நம்புகின்றேன்.

தொடர்ச்சி▼

# வடக்கு மாகாண வளர்ச்சிக்கு அழைப்பு முதலீட்டாளர்களை வரவேற்கின்றோம்

## ‘யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி’ தொடக்க விழாவில் ஆளுநர் தெரிவிப்பு

தொடர்ச்சி▲

வடக்கு மாகாணத்தில் இப்போது முதலீட்டுக்குச்சாதகமான சூழல் காணப்படுகின்றது. தற்போதைய அரசாங்கம், வடக்கு மாகாணத்தில் மூன்று புதிய முதலீட்டு வலயங்களை நிறுவுவதற்கான பணிகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. வடக்கின் பல வளங்கள் இன்னமும் தொட்டுக்கூடப் பார்க்கப்படாமல் உள்ளன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, எமது மாகாண இளையோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி, இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பை அதிகரிக்க முன்வருமாறு அனைத்து முதலீட்டாளர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்.” – என்றார்.

யாழ்ப்பாணம் வணிக மற்றும் கைத்தொழில் மன்றம் மற்றும் லங்கா கண்காட்சி மற்றும் மாநாட்டுச் சேவைகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இக்கண்காட்சியின் தொடக்க விழாவைத் தொடர்ந்து, விருந்தினர்கள் மங்கல வாத்தியங்களுடன் யாழ். முற்றவெளி மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு நாடா வெட்டி கண்காட்சிக் கூடங்கள் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஆளுநர் மற்றும் விருந்தினர்கள் வர்த்தகக் கூடங்களைப் பார்வையிட்டனர். 400 இற்கு மேற்பட்ட வர்த்தகக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ சாய் முரளி, யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் லங்கா கண்காட்சி மற்றும் மாநாட்டுச் சேவைகள் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அர்ஜுன் தர்மதாச மற்றும் பணிப்பாளர் ஏ.எப்.எம். பாரூக், யாழ். வணிகர் மற்றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் குலசிங்கம் வசீகரன், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கே.விக்னேஷ், லங்கா கண்காட்சி மற்றும் மாநாட்டுச் சேவைகள் நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட முகாமையாளர் இமால்கா முல்லேகம, வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் அனுசரணை நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.










# அரச வைத்திய அதிகாரிகள் வேலைநிறுத்தப் போராட்டம்

## இது அநீதியானது என்கின்றது அரசு



அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கை நியாயமானது அல்ல என்று பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

நாடு முழுவதும் இன்று காலை 8 மணி முதல் 48 மணிநேர அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் வைத்தியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இலவச சுகாதார சேவைகள் மற்றும் வைத்தியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதாலேயே தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது.

இதனால் வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளுக்கு வரும் நோயாளிகள் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

எனினும், சிறார் வைத்தியசாலை, தாய்மார் வைத்தியசாலை, இராணுவ வைத்தியசாலை உட்பட முக்கிய இடங்களில் போராட்டம் இடம்பெறவில்லை.

இந்நிலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜேமுனி கருத்து வெளியிடுகையில்,

"வைத்தியர்களில் ஒரு பிரிவினர்தான் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இது அநீதியான வேலைநிறுத்தப் போராட்டமாகும்.

வைத்தியர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் கூட அநீதியானவை.

பேரிடரில் இருந்து மீண்டுவரும் சூழ்நிலையில் அவர்களால் கோரப்படும் கோரிக்கைகள் நியாயமானவை அல்ல." – என்றார்.

# அனுஷ பெல்பிட்ட கைது!

## பெப்ரவரி 6 வரை விளக்கமறியல்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவும் முன்னாள் ஊடகத்துறை அமைச்சின் செயலாளரும் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவருமான அனுஷ பெல்பிட்டவை, எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அனுஷ பெல்பிட்ட, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இன்று காலை கைது செய்யப்பட்டமையைத் தொடர்ந்து, கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

46 மில்லியன் ரூபாவை எவ்வாறு சம்பாதித்தார் என்பதை வெளியிடத் தவறியமைக்காக அனுஷ பெல்பிட்ட இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தயாசிறி உண்மையான...

அதற்குப் பதிலளிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் இன்று சிறீதரன் எம்.பி. உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ஒரு மூத்த அரசியல் தலைவரான தயாசிறி ஜயசேகர இவ்வாறு பேசியது மிகப் பிழையான செயற்பாடாகும். அவர் அவ்வாறு சொல்லி இருந்தால், எந்த வங்கியில் எவ்வளவு பணம் எந்தத் திகதியில் வைப்பிலிடப்பட்டது என்பதை நீதியான ஓர் அரசியல் தலைவனாக இருந்தால் அவர் நாடாளுமன்றத்தில் பதிவு செய்ய வேண்டும்.

அவர் உண்மையிலே ஆடையுடன்தான் வந்து சபையில் பேசுகின்றார் என்றால் அவர் இதைச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

நான் இந்த நாடாளுமன்றத்துக்கு வந்து 16 வருடங்கள் கடந்திருக்கின்றன. இதுவரை காலத்தில் நான் நீதி, தர்மத்தின் படியே நடந்திருக்கின்றேன்.

நான் அரசமைப்பு பேரவையில் ஒரு சுயாதீன எம்.பியாக நீதியாகவும் சுயாதீனமாகவும் தமிழ் மக்கள் சார்ந்து முடிவுகளை எடுத்திருக்கின்றேன்." – என்றார்.

### பாதாளக் குழுக்கள்...

பாதாள உலகக் குழுக்களுக்கும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கும் அடியோடு முடிவு கட்டப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி உறுதியாக நிலைநிறுத்தப்படும் என்றும், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வித தளர்வும் வழங்கப்படமாட்டாது என்றும் ஊடகங்களிடம் அவர் குறிப்பிட்டார்.

நீதி அமைச்சின் கீழ் செயற்படும் சட்ட அமுலாக்க அமைப்புகள் மேலும் பலப்படுத்தப்படவுள்ளதுடன், குற்றவாளிகளைப் பாதுகாக்கும் எந்தவொரு சக்தியும் இனி செயற்பட முடியாத நிலை உருவாக்கப்படும் என்றும் நீதி அமைச்சர் கூறினார்.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தால் சமூகத்தில் ஏற்படும் தீமைகளை முழுமையாக ஒழிப்பதே அரசின் பிரதான இலக்காகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் குற்றவாளிகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார குறிப்பிட்டார்.

அரசியல் அதிகாரம், செல்வாக்கு அல்லது பதவி ஆகியவற்றை காரணமாகக் கொண்டு எவரும் சட்டத்திலிருந்து தப்ப முடியாது என்றும் அவர் எச்சரித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசு, ஊழல், குற்றச்செயல்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று மீண்டும் வலியுறுத்திய நீதி அமைச்சர், மக்களின் பாதுகாப்பும் நியாயமும்தான் அரசின் முதன்மை நோக்கம் என்றும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகள் மூலம் நாட்டில் நம்பிக்கையுடனான சமூக சூழல் உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

### சட்டமா அதிபரை...

நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

சட்டமா அதிபருக்கு எதிராக நேற்று முன்தினம் போராட்டம் இடம்பெற்றது. அதேபோல் அவருக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் சிலர் களமிறங்கி இருந்தனர்.

இந்நிலையிலேயே நீதி அமைச்சர் நேற்று ஊடகங்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சட்டமா அதிபரைப் பாதுகாக்க வேண்டும் என ஒரு சாராரும், அவரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என மற்றுமொரு சாராரும் சமூகவலைத் தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

சட்டமா அதிபரைப் பாதுகாக்கும் நீதி அமைச்சரும் வீடு செல்ல வேண்டும் எனவும் சிலர் கூறி வருகின்றனர்.

ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் உரிய இடங்களில் அவற்றைத் தாக்கல் செய்யலாம். ஏனெனில் சட்டம் என்பது அனைவருக்கும் சமம்.

சட்டமா அதிபரை நீக்குவது பற்றி அமைச்சரவையில் ஆராயப்பட வில்லை. குற்றப் பிரேரணை கொண்டு வருவது பற்றியும் கலந்துரையாடப்படவில்லை." – என்றார்.



# இராஜதந்திர வெற்றியோடு நாடு திரும்பினார் பிரதமர்

உலகப் பொருளாதார மன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக சுவிட்சர்லாந்து சென்றிருந்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இன்று பிற்பகல் நாடு திரும்பினார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற குறித்த மாநாட்டுக்கு இணையாக பிரதமர் பல முக்கியத்துவமிக்க மற்றும் வெற்றிகரமான இராஜதந்திர சந்திப்புகளை நடத்தினார்.

சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள், ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் உட்பட சர்வதேச அமைப்புகளின் முக்கியஸ்தர்களை சந்தித்திருந்தார்.

மேலும், சிங்கப்பூர் ஜனாதிபதியுடனும் முக்கிய கலந்துரையாடலை நடத்தினார்.

சுவிட்சர்லாந்தில் வசிக்கும் புலம்பெயர் இலங்கையர்களையும் இந்த விஜயத்தின்போது பிரதமர் சந்தித்தார்.

சுவிஸில் உள்ள சில வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் கண்காணிப்பு பயணம் மேற்கொண்டார்.

இலங்கையின் பொருளாதார மீட்சி, சுற்றுலாத்துறை மேம்பாடு மற்றும் வெளிநாட்டு முதலீடு என்பவற்றை இலக்காகக்கொண்டே பிரதமரின் சந்திப்புகள் நடைபெற்றன.

பிரதமருடன் அமைச்சர் அனில் பெர்னாண்டோவும் மாநாட்டில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமரின் சுவிட்சர்லாந்து பயணம் இராஜதந்திர ரீதியில் வெற்றிகரமாக அமைந்தது என்று ஆளுங்கட்சியினர் தெரிவித்தனர்.



# ஜோன்ஸ்டன், 2 மகன்கள் உட்பட ஐவரின் விளக்கமறியல் நீடிப்பு!

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அவரது இரண்டு மகன்கள் உட்பட 5 சந்தேகநபர்களையும் எதிர்வரும் ஜனவரி 30 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களை வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப் படுத்தப்பட்ட போதே, இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில், சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி ஒன்றை முறைகேடாகப் பயன்படுத்தினார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிரஜா சக்திக்கு எதிர்ப்பு

ஜனாதிபதி தேர்தலில் மிக உறுதியான வெற்றி வாய்ப்பை தேசிய மக்கள் சக்தி பெறவில்லை. ஆக 42 வீத வாக்குகளைப் பெற்ற அக்கட்சியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க, இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு கணக்கெடுப்பின் பின்னரே வெற்றி பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

ஆயினும், அந்த வெற்றியை வைத்துக்கொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றியை அந்தக் கட்சி ஈட்டியது. மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மையையும் பெற்றது.

அந்த வெற்றியை வைத்துக் கொண்டு, ஏற்கனவே தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளூராட்சி தேர்தலையும் மாகாண சபை தேர்தலையும் ஒரு வருடத்துக்குள் நடத்தி முடிப்போம் என்று அளித்த வாக்குறுதிப்படி உள்ளூராட்சித் தேர்தலை விரைந்து நடத்தியது தேசிய மக்கள் சக்தி அரசு.

ஆனால், மக்கள், குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்கள், குறுகிய காலத்தில் சுதாகரித்துக் கொண்டு, தேசிய மக்கள் சக்தியை உள்ளூராட்சித் தேர்தலில் பெரும் பின்னடைவுக்குள் தள்ளினர். அதனால் இப்போது மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் அதற்குப் பயந்து அதனை இழுத்தடிக்கிறது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

அதேசமயம் உள்ளூராட்சி சபைகள் மட்டத்தில் தாம் இழந்த அதிகாரப் பிடியை மீண்டும் பின் கதவால் நிலைநிறுத்துவதற்காக ‘பிரஜா சக்தி’ என்ற திட்டத்தை கொண்டு வந்து, உள்ளூராட்சி சபை நிர்வாகங்களுக்கு சமாந்தரமாக தம்முடைய கட்சி ஆள்களை - வெளியாரை - கொண்டு நிர்வாகத்தை நடத்தும் ஒரு முறைமையை முறையற்ற விதத்தில் அறிமுகப் படுத்துகிறது ஆளும்தரப்பு.

இருக்கும் ஆட்சி அதிகார முறைமைக்கு மாற்றாக, இன்னொரு முறைமையை, சட்ட முறைமைக்கு மாறாக கொண்டு வருவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. இதனையே, ஆழிப் பேரலை அனர்த்த காலத்தில் சந்திரிகா அரசு புலிகளோடு சேர்ந்து அவசர நிவாரணப் பணிகளுக்கான திட்டமாக முன்னெடுத்த போது ஒரு காரணமாகக் காட்டி உயர் நீதிமன்றம் மூலம் அதனை முறியடிக்கச் செய்தது இதே தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளியான ஜே.வி.பி.

இப்போது உள்ளூராட்சி மட்டத்தில் தான் இழந்த அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக அது தானே அந்த வேலையை முன்னெடுக்கின்றது.

வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகள் ஒவ்வொன்றிலும் பிரஜா சக்தி நடவடிக்கைகளுக்கு எதிராக இடம்பெற்று வரும் குழப்பங்கள், எதிர்ப்புகள் இந்த நடவடிக்கை முறைமையின் அடிப்படைத் தவறுக்கு எதிரான கிளர்ச்சியாகவே கொள்ளப்பட வேண்டும்.

இப்போது சூடு பிடித்து வரும் இந்தப் போக்கு, அடுத்து வரும் மாதங்களில் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தில் இல்லாத எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் பெருமளவில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

பிரஜா சக்திக்கு எதிரான குரல் இனி ஓங்கி ஒலிக்கும், உள்ளூராட்சி சபைகளில் பிரச்சினைகள் வெடிக்கும் என்பது போகின்ற போக்கில் வெளிப்படுகின்றது.

# நல்லூர் சங்கிலியன் மன்ற ஏற்பாட்டில் திருவாசக விழாவும் பொங்கல் நிகழ்வும்

இந்து சமய அலுவல்கள் திணைக்களம் நல்லூர் சங்கிலியன் மன்றத்துடன் இணைந்து நடத்தும் திருவாசக விழாவும் பொங்கல் நிகழ்வும் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளன.

நல்லூர் திவ்வியஜீவன சங்க மண்டபத்தில் நிலையத்தின் தலைவர் வி. ஜனகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநுருத்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ். சத்தியேந்திரனும் கௌரவ விருந்தினர்களாக சி. தர்மகுலசிங்கம், தொழிலதிபர் க. செந்தூரன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

# மாகாண சபையின் நியதிச் சட்டங்களை மீறி உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்று நிருபத்தை நடைமுறைப்படுத்த முடியாது - கிஷோர் காட்டம்



வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டங்களை மீறி உள்ளூராட்சி ஆணையாளரால் அனுப்பப்படுகின்ற சுற்றுநிருபங்களை ஒரு போதும் நடைமுறைப்படுத்த முடியாது. அவ்வாறு நடைமுறைக்கு முரணான விதத்தில் அனுப்பப்பட்ட சுற்றுநிருப கடிதத்தை மீள அனுப்பி எதிர்ப்பை வெளியிட வேண்டும் என்று சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் ஞா.கிஷோர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வின்போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

அண்மையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் தவிசாளர் மற்றும் செயலாளருக்கு முகவரியிட்டு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் வணிக நிறுவனங்களுக்கான வியாபார உரிமம் வழங்கும் போது கட்டடங்களுக்கான குடிபுகு சான்றிதழ் அவசியம் எனவும் அதனை சமர்ப்பிக்காத பட்சத்தில் வியாபார உரிமத்தை இடைநிறுத்தி சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சுற்றுநிருபம் உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பாக மாகாண சபையால் இயற்றப்பட்ட நியாதிச் சட்டங்களுக்கு முரணாக உள்ளது. மாகாண சபையால் உருவாக்கப்பட்ட துணை விதிகளில் வியாபார அனுமதிக்கு குடிபுகு சான்றிதழ் அவசியமில்லை. மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்த கோருகின்ற இத்தருணத்தில் இவ்வாறான மாகாண சபை துணை விதிகளுக்கு முரணான செயற்பாடுகளை ஏற்க முடியாது.

கட்டடங்களுக்கு அனுமதி பெறப்பட வேண்டும். குடிபுகுதல் சான்றிதழ் பெறப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. ஆனால் வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை 2010 ஆம் ஆண்டின் பின்னரே கட்டடங்களுக்கு அனுமதி பெறும் நடவடிக்கைகள் ஆரம்பித்தன.

அதற்கு முன்னரே 50 வருட காலத்துக்கும் மேலாக வியாபார நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்ற வியாபாரிகள் உள்ளனர். எனவே உள்ளூராட்சி சட்டத்துக்கு முரணான கடித்தை ஏற்க முடியாது. உத்தியோகத்தர்களை பிழையாக வழிநடத்த முயற்சிக்க வேண்டாம்.

எனவே உள்ளூராட்சி ஆணையாளரால் அனுப்பப்பட்ட சுற்றுநிருபம் மீளப் பெறப்பட வேண்டும். பழைய முறைமையில் வியாபாரிகளுக்கு வியாபார உரிமம் வழங்கப்பட வேண்டும். அதனையும் மீறி நடைமுறைப்படுத்த முயன்றால் வடக்கில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளும் இணைந்து இது தொடர்பில் நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை ஏற்படும்.- என்றார்.

# அருணன் ஹேமச்சந்திராவின் தாயார் இன்று காலமானார்



(எஸ்.கீதபொன்கலன்)

பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவின் தாயார் திருமதி ஜீவந்தினி ஹேமச்சந்திரா இன்று வெள்ளிக்கிழமை, அதிகாலை திருகோணமலையில் காலமானார்.

திருகோணமலையைச் சேர்ந்த பிரபல மருத்துவர் குமாரசுவாமி ஹேமச்சந்ராவின் துணைவியாரான இவர்,புத்தளம் முன்னேஸ்வரத்தை பிறப்பிடமாக கொண்டவர் ஆவார்.

இறுதிச் சடங்கு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு திருகோணமலை இந்து மயானத்தில் நடைபெற இருந்தது.




# மல்வத்தை விபுலானந்தாவின் நூற்றாண்டுவிழா நடைபவனி

**(வி.ரி. சகாதேவராஜா)**

சம்மாந்துறை வலயத்தில் உள்ள மல்வத்தை விபுலானந்த மகா வித்தியாலய நூற்றாண்டுவிழா முன்னிட்டு மாபெரும் நடைபவனி இடம்பெற்றது.








# அதிநவீன INDEX Braille என்னும் புதிய அச்சு இயந்திரம் தருவிப்பு

## விழிப்புலனற்றோருக்கான சேவையில் இ.கி.மிஷன்





(வி.ரி. சகாதேவராஜா)

விழிப்புலனற்றோர் பயன்படுத்தும், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட அதிநவீன ஐனேுநுஓ டீசயடைடந என்னும் புதிய அச்சு இயந்திரம் மட்டக்களப்புக்குத் தருவிக்கப்பட்டுள்ளது.

இராமகிருஷ்ண மிஷனின் விழிப்புலனற்றோருக்கான சேவையில் இந் நவீன இயந்திரம் புதிய மைல்கல் எனலாம்.

அந்தவகையில் தற்போது புதிதாக, Braille அச்சுடன் Tactile (தொடுதிறன் அடிப்படையிலான) அச்சையும் ஒருங்கிணைத்து தயாரிக்கக்கூடிய ROMEO 60 – Tactile & Braille Printer எனும் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட அச்சு இயந்திரமும் பெறப்பட்டுள்ளது.

இந்த நவீன இயந்திரத்தை இயக்கி வைக்கும் நிகழ்வு மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன், பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தர் மஹறாஜின் தலைமையில் நடைபெற்றது.

இதனை ராமகிருஷ்ண மிஷன், இலங்கைக்கான தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மஹறாஜ் திறந்து வைத்தார்.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, விழிப்புலனற்றோருக்கான ஒருங்கிணைந்த வளங்கள் மற்றும் பயிற்சி மையம் (Inclusive Resource and Training Centre - IRTC) தனது சேவைகளில் புதிய முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

IRTC ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல், விழிப்புலனற்ற மாணவர்களுக்காக கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுயமேம்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் Braille நூல்கள், எழுத்துமூலக் கற்கை வளங்கள், தொழில்நுட்ப பயிற்சிகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் ஒலி வடிவ புத்தகங்கள் என தொடர்ச்சியான சேவைகளை ஆற்றிவந்துள்ளது.

அதன் முதல் படிக்கல்லாக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட INDEX Braille என்னும் புதிய அச்சு இயந்திரம் பெறப்பட்டு அதன் மூலமாக தரம் 10, 11 ஆம் வகுப்பு பாடப் புத்தகங்கள், தமிழ் வார்த்தை தேடல் புதிர்கள், கணிதப் பெருக்கல் அட்டவணை, விஞ்ஞான ஆவர்த்தன அட்டவணை, விழிப்புலமாற்றாற்றல் உடையோரின் வாழ்வில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு எனும் நூல்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

இது விழிப்புலனற்றோரின் கல்வி வளர்ச்சியில் அடித்தளமாக அமைந்தது. மற்றும் IRTCயின் சேவைகள் மையத்துக்குள் மட்டுமல்லாது, பிரதேச செயலகங்களுக்கு நேரடியாகச் சென்று, விழிப்புணர்வு கலந்துரையாடல்களும் இடம் பெற்று வருகின்றன.



# நல்லதண்ணி சிவனொளிபாத வீதியிலுள்ள குளவிக் கூடுகளை அகற்றுமாறு கோரிக்கை

(மஸ்கெலியா விசேட நிருபர்)

நல்லதண்ணி சிவனொளிபாத மலைக்குச் செல்லும் வீதியில் உள்ள மரங்கள் மற்றும் பாறைக் குகைகளில் குளவிகள் கூடுகள் கட்டியுள்ளமையால் சிவனொளி பாத மலைக்குச் செல்லும் யாத்திரீகர்கள் மற்றும் அந்தப் பகுதி மக்கள் கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். எனவே சிவனொளிபாத மலைக்குச் செல்லும் யாத்ரீகர்கள் மற்றும் அந்தப் பகுதி மக்கள் குளவி கூடுகளை உடனடியாக அகற்றுமாறு வனவிலங்கு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த குளவி கூடுகளை பருந்துகள் மற்றும் கழுகுகள் தொடர்ந்து தாக்குகின்றன. அவை பலத்த காற்றால் விழுகின்றன. குளவிகள் பரவி சிவனொளிபாத மலைக்குச் செல்லும் யாத்திரீகர்களைத் தாக்குகின்றன. காயமடைந்தவர்களை நல்லதண்ணி நகரத்துக்குக் கொண்டு வர பல மணி நேரம் ஆகிறது. மஸ்கெலியா நகரத்தில் உள்ள பிராந்திய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும்போது ஆபத்தான நிலையில் குளவித் தக்கத்துக்கு ஆளாகியோர் இறந்த சம்பவங்களும் நடந்துள்ளன.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு குளவிக் கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர்.






# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பீடி இலை பண்டல்கள் பறிமுதல்!

## படகு மற்றும் வாகனம் மீட்பு; மூவர் கைது

(மன்னார் நிருபர்)

இலங்கைக்கு கடத்துவதற்காக திருப்புல்லாணி அடுத்த சல்லித் தோப்பு கடற்கரையில் இருந்து படகில் ஏற்றி கொண்டிருந்த 1600 கிலோ பீடி இலை பண்டல்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் கடத்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட வாகனம் மற்றும் படகு ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சம்பவத்துடன் தொடர்புடைய மூவரைக் கைது செய்த திருப்புல்லாணி பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்ட கடற்கரை இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்குக் கஞ்சா, கடல் அட்டை, சமையல் மஞ்சள், பீடி இலை பண்டல்கள், ஐஸ் போதை பொருள், ஹெராயின், கஞ்சா ஆயில் உள்ளிட்ட பொருட்கள் அதிக அளவு கடத்தப்பட்டு வருவதால் கடத்தல் சம்பவங்களை தடுக்க இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லையில் கடற் படையினர் மற்றும் கடலோரப் பகுதிகளில் மத்திய, மாநில உளவுத் துறை , மரைன் பொலிஸார் சுங்கத்துறை அதிகாரிகள் கண்காணிப்பு ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் திருப்புல்லாணி பொலிஸ் ஆய்வாளருக்கு, திருப்புல்லாணி அடுத்த சல்லித் தோப்பு கடற்கரையில் இருந்து இலங்கைக்கு சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக பீடி இலை பண்டல்கள் கடத்த இருப்பதாக இரகசியத் தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை சுமார் 2 மணி அளவில் திருப்புல்லாணி பொலிஸ் ஆய்வாளர், தனிப்பிரிவு பொலிஸாருடன் இணைந்து அப்பகுதியில் திடீர் ரோந்து பணியில் ஈடுபட்டார்.

அப்போது சரக்கு வாகனங்களில் இருந்து படகில் இலங்கைக்கு கடத்துவதற்காக பீடி இலை பண்டல்களை ஏற்றப்பட்டுக் கொண்டிருந்ததை கண்ட பொலிஸார் அவர்களை மடக்கி பிடித்தனர்.

# பெண்களின் பேச்சுச் சுதந்திரத்தையும் மதிக்கும் பண்பைக் கடைப்பிடிக்க வேண்டும்

## மன்னார் நகர சபையில் பெண் உறுப்பினர்கள் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

உள்ளூராட்சி மன்றங்களில் இருபத்தைந்து வீதமான பெண்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் எனச் சட்ட வரைவு இருக்கின்றபோதும் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட பெண்களின் பேச்சு சுதந்திரத்தையும் செயல்பாட்டையும் முடக்கும் செயல்பாட்டில் இந்த சபையில் சிலர் இருப்பது மிகவும் கவலையை ஏற்படுத்தி உள்ளது என்று மன்னார் நகர சபை அமர்வில் பெண்கள் உறுப்பினர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்தனர்.

மன்னார் நகர சபையின் எட்டாவது அமர்வு இந்தச் சபையின் முதல்வர் ஏ.பி.டீ.டீபி.வசந்தன் தலைமையில் வியாழக்கிழமை மன்னார் நகர சபை கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது இந்தக் கூட்டத்தில் பெண்கள் உறுப்பினர்கள் ஒன்று திரண்டு பெண்களுக்கு எதிரான செயல்பாட்டைக் கண்டித்துக் கருத்துத் தெரிவிக்க முற்பட்ட வேளையில் ஒரிரு உறுப்பினர்கள் அவர்களின் கருத்துக்களை தெரிவிக்காத வகையில் இங்கு குழப்பத்தை ஏற்படுத்தினர்.



இருந்தும் இந்தச் சபையில் உறுப்பினர்களாக இருக்கும் மூன்று பெண்களும் தங்கள் கருத்துக்களை முன்வைத்து உரையாற்றுகையில்,

பெண்களுக்கு எதிராக சமூக ஊடகங்கள் அவதூறுகளை பரப்பி வருகின்றன. இதில் அரசியலுக்கு வரும் பெண்கள் மட்டுமல்ல சமூக மட்டத்திலுள்ள பெண்களும் இலக்கு வைக்கப்படுகின்றனர். குறிப்பாக சுமூகங்களுக்கு எதாவது செய்யலாம் என பெண்கள் வெளிவரும்பொழுது இவர்கள் குறி வைக்கப்படுகின்றனர்.

அரசியலுக்குள் வந்திருக்கும் நாங்கள் அரசியலாக இருக்கலாம் அல்லது சமூகப் பணியாளராக இருக்கலாம் ஆண், பெண் இரு பாலாருடனும் அபிவிருத்தி பணியில் பயணிக்க வேண்டிய கட்டாயம் உண்டு.

இவைகளை வைத்து அண்மைக் காலமாகப் பெண்களை இழிவுப்படுத்தும் வலைத்தளங்கள் அதிகரித்து வருகின்றன. எங்களைப் பொருத்தமட்டில் இந்த சபைக்குள் இருப்பவர்களே எங்களை மட்டம் தட்டும் நோக்குடன் உள்ளனர் என்பது வெளிச்சமாகின்றது. அதற்காகவே இந்த விடயத்தை நாங்கள் இந்த சபையில் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்தக் கருத்தைத் தெரிவிக்க முற்பட்ட இந்த சந்தர்ப்பத்தில் இங்கு எங்களை பேசவிடாது குழப்பவாதிகள் காணப்படுவது இங்கு கண்கூடாக தற்பொழுது தெரிகின்றது.

ஆகவே இந்த சபை பெண்களையும் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தனர்.



# மன்னாரில் டிட்வாவால் சேதமடைந்த வழிபாட்டுத் தலங்களுக்கு நிதி வழங்கல்





**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

கடந்த வருடம் ஏற்பட்ட டிட்வா புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தால் மன்னார் மாவட்டத்தில் சேதமடைந்த வழிபாட்டுத் தலங்களுக்கு முதல் கட்டமாக மன்னார் மாவட்ட செயலகத்தில் வைத்து அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நிதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் 42 இந்து ஆலயங்கள், 17 கிறிஸ்தவ ஆலயங்கள், 6 பள்ளி வாசல்கள் என 65 வழிபாட்டுத் தலங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, மூன்று பௌத்த விகாரைகளுக்கு நிவாரண கொடுப்பனவுகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர், பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் கோயில் நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.





# சிவானந்தாவில் நூற்றாண்டை முன்னிட்டு கால்கோள் நூற்றாண்டு விழா தூபி திறப்பு!

**( வி.ரி.சகாதேவராஜா)**

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளார் மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயத்துக்கு அடிக்கல் நட்டு நாளை சனிக்கிழமையுடன் நூறு வருடங்களாகின்றன.

அந்த வரலாற்று நிகழ்வை நினைவு கூரும் வகையில் நூற்றாண்டு கால்கோள் விழாவை ஆரம்பிக்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது. கூடவே கால்கோள் நூற்றாண்டு விழா தூபியும் திறந்து வைக்கப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 07.30 மணிக்கு கல்லடி பாலத்துக்கு அருகாமையில் சுவாமி விவேகானந்தர் மற்றும் சுவாமி விபுலானந்தர் அடிகளர்களின் சிலைகளின் பாதங்களுக்கு மலர் மாலை அணிவித்து ஊர்வலம் ஆரம்பமாகவுள்ளது.

அந்த ஊர்வலம் கல்லடி சித்தி விநாயகர் ஆலயத்தைத் தரிசித்து, அதன் பின்னர் இராமகிருஷ்ண மிஷனை அடைந்து வழிபட்டு, பின் கல்லடி உப்போடை சித்திவிநாயகர் மற்றும் பேச்சியம்மன் ஆலயங்களை அடைந்து பாடசாலையை வந்தடையும்.

தொடர்ந்து சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் சமாதிக்கு மலர் மாலை அணிவித்து பாடசாலையை வந்தடைந்து சுவாமிகளின் சிலைகளுக்கு மாலை அணிவிக்கப்படும்.

அங்கு பாடசாலையை ஆரம்பிக்க நிலம், நிதி உதவி செய்த வள்ளல்களின் படங்களுக்கு மாலை அணிவித்து அதன் பின்னர் பாடசாலையில் அமைக்கப்பட்ட "கால்கோள் நூற்றாண்டு விழா தூபி" திறக்கப்படவுள்ளது.

# 'கல்விக்கு கரம் கொடுப்போம்' திட்டத்தில் 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

**(நூருல் ஹுதா உமர்)**

"கல்விக்கு கரம் கொடுப்போம்" என்ற தொனிப்பொருளின் கீழ், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் அமீர் அப்னானின் ஏற்பாட்டில் 06 லட்சம் ரூபா செலவில், முதல் கட்டமாக 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அப்னான் எடுக்கேஷன் போரம் நிர்வாகிகளிடம் குறித்த கற்றல் உபகரணங்கள் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வித் தேவைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. பாடப்புத்தகங்கள், பயிற்சி புத்தகங்கள், எழுதுகோல்கள் உள்ளிட்ட அத்தியாவசியக் கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.



இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதேச சபை உறுப்பினர் அமீர் அப்னான்,

ஒரு சமூகத்தின் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவது கல்வியே. பொருளாதாரத் தடைகள் எந்த மாணவனின் கனவுகளையும் தடுக்கக் கூடாது என்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கம். கல்விக்காக வழங்கப்படும் உதவி, நாட்டின் எதிர்காலத்துக்கான முதலீடு எனக் குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டம் தொடர்ச்சியாக அடுத்த கட்டங்களிலும் விரிவுபடுத்தப்படும் என்றும், கல்வி, சமூக நலன் மற்றும் மாணவர் மேம்பாட்டை மையமாகக் கொண்டு பல்வேறு திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# வலப்பனை அல்மா - லியங்வெல பாலம் விமானப்படையினரால் திருத்தி அமைப்பு!





(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச சபைக்கு உட்பட்ட குருந்தோயா வட்டாரத்தில் அமைந்துள்ள அல்மா கிரேமண்ட் கிராமத்துப் பாலம், விமானப்படையினரின் பங்களிப்புடன் சீர்செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்காக நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அல்மா முதல் லியங்வெல கிராமங்களுக்கு இடையிலான பிரதான போக்குவரத்துப் பாதையில் அமைந்துள்ள இப்பாலம் பல தசாப்தங்களாகப் புனரமைக்கப்படாமல் காணப்பட்டது.

அண்மைய அனர்த்தங்களால் இப்பாலம் பலத்த சேதமடைந்திருந்த நிலையில், பிரதேச சபை உறுப்பினர் மு. ராம்கியின் ஒருங்கிணைப்பில் விமானப்படையினரின் ஒத்துழைப்பு கோரப்பட்டது.

விமானப்படையினரின் துரித கதியிலான பணிகளினால் பாலம் சீர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அப்பகுதி மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இப்பணியில் ஈடுபட்ட விமானப்படை வீரர்களுக்கு மக்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு, இப்பணியை ஒருங்கிணைத்த பிரதேச சபை உறுப்பினருக்கும் நன்றிகளைத் தெரிவித்தனர்.



## வேலோடுமலை தேவஸ்தானத்தில்

# நாதஸ்வர சக்கரவர்த்தி உள்ளிட்ட ஐந்து கலைஞர்களுக்கு கௌரவம்

“ஈழத்து பழநி” என்று அழைக்கப்படும் மட்டக்களப்பு சித்தாண்டி வேலோடுமலை முருகன் தேவஸ்தானத்தில், சித்தர்கள் குரல் அமைப்பின் ஏற்பாட்டில், உலகறிந்த நாதஸ்வர சக்கரவர்த்தி ஈழ நல்லூர் பி.எஸ்.பாலமுருகன் உள்ளிட்ட ஐந்து கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்துப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவில் உலகப்புகழ் பெற்ற ஈழ நல்லூர் நாதஸ்வரச் சக்கரவர்த்தி பி.எஸ். பாலமுருகன், சித்தர்களின் குரல் ஆஸ்தான சிரேஷ்ட ஊடகவியலாளர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா, வேலோடுமலை தேவஸ்தான ஆதீன கர்த்தா சு.தியாகராஜா சுவாமிகள் , யாழ். புகழ் தவில் வித்துவான் எஸ்.செந்தூரன், ஊடகவியலாளர் உ.உதயகாந் ஆகிய ஐந்து கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.



இந்த உலகை ஆளுகின்ற 210 சித்தர்களை பூஜிக்கும் சத்ரு சம்ஹார வேள்வி யாகம் கடந்த புதன்கிழமை நள்ளிரவில் இடம்பெற்ற போது சித்தர்கள் குரல் அமைப்பினரால் இந்தக் கௌரவம் வழங்கி வைக்கப்பட்டது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான தலைவர் சிவசங்கர் ஜீ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆலோசகர் நமசிவாய மகேஸ்வரன், அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத்தலைவர் மனோகரன் ஆகியோர் ஐந்து கலைஞர்களுக்கான கௌரவத்தை வழங்கினர்.

# ஊழல் செய்கின்ற தி.மு.க. அரசுக்கு விடை கொடுக்கின்ற காலம் வந்தது

## பிரதமர் மோடி தெரிவிப்பு

"ஊழல் செய்யும் தி.மு.க. அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்து விட்டது என்று தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது. தமிழ்நாடு தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருக்கிறது."

- இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடி தமிழில் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

"தமிழ்நாடு தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருக்கிறது. மதுராந்தகத்தில் இன்று பிற்பகலில் நடைபெறும் பேரணியில் நான் தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களுடன் கலந்து கொள்ள இருக்கிறேன்.



ஊழல் தி.மு.க. அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது என்று தமிழ்நாடு முடிவு செய்து விட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் சாதனையும் பிராந்திய பெருவிருப்பங்கள் மீதான அதன் அர்ப்பணிப்பும் மாநில மக்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன." என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்று செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார்.

# பா.ஜ.க. கூட்டணிக்கு தமிழகம் தோல்வியைத்தான் வழங்கும்

## மோடியின் பதிவுக்கு ஸ்டாலின் பதிலடி

"தேர்தல் 'சீசன்' வந்தால் மட்டும், தமிழ்நாடு பக்கம் அடிக்கடி வரும் பிரதமர் மோடி அவர்களே. தொடர்ந்து துரோகங்களை மட்டுமே செய்யும் பா.ஜ.க. கூட்டணிக்கு தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத்தான் தரும்."

- இவ்வாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

"தேசிய ஜனநாயக கூட்டணியின் துரோகங்களை தமிழகம் நினைத்துப் பார்க்கிறது. தேர்தல் 'சீசன்' வந்தால் மட்டும், தமிழ்நாடு பக்கம் அடிக்கடி வரும் பிரதமர் மோடி அவர்களே. தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய 3,458 கோடி ரூபா சமக்ர ஷிக்ஷா கல்வி நிதி எப்போது வரும்?.

மக்களவைத் தொகுதி மறுவரையறையின் கீழ் தமிழ்நாட்டின் தொகுதிகள் குறைக்கப்படாது என்ற உறுதிமொழி உங்கள் வாயில் இருந்து எப்போது வரும்?. பா.ஜ.க.வின் முகவர் போல் செயல்படும் ஆளுநரின் அராஜகம் எப்போது முடிவுக்கு வரும்?. தமிழ்ப்பாசத்தில் தமிழர்களை மிஞ்சியதாய்க் காட்டிக்கொள்ளும் உங்கள் அரசிடம் இருந்து தமிழுக்குரிய நிதி ஒதுக்கீடு எப்போது வரும்?.



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் தொடரும், மாநிலங்கள் மீது நிதிச் சுமையை ஏற்றி ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துக் கட்டும் வி.பி. ஜிராம்ஜி கைவிடப்படும் என வாக்குறுதி எப்போது வரும்?.

பத்தாண்டுகளாக 'இன்ச் இன்ச்'சாக ஒன்றிய பா.ஜ.க. அரசு இழைத்து வரும் மதுரை எய்ம்ஸ் எனும் எட்டாவது உலக அதிசயம் எப்போது எங்கள் கண்முன் வரும்?. இயற்கைப் பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை எப்போதுதான் வரும்?.

ஓசூர் விமான நிலையம், கோவை, மதுரை மெட்ரோ திட்டங்களுக்கு எப்போது ஒப்புதல் வரும்?. கீழடி அறிக்கை எப்போது வெளியே வரும்?.

ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் ஒருமனதான கோரிக்கையான நீட் விலக்கு எப்போது அமலுக்கு வரும்?. தொடர்ந்து துரோகங்களை மட்டுமே செய்யும் பா.ஜ.க. கூட்டணிக்குத் தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத்தான் தரும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.கவில் இணைந்தார் அ.ம.மு.க. மாணிக்கராஜா

அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் முன்னாள் துணை பொதுச் செயலாளர் எஸ்.வி.எஸ்.பி. மாணிக்கராஜா, முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இன்று காலை இணைந்தார்.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் அடுத்த சில மாதங்களில் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு பல்வேறு அரசியல் கட்சிகள் தேர்தலை எதிர்கொள்ள தீவிர களப்பணியாற்றி வருகின்றன.

இந்தச் சூழலில் அ.தி.மு.க, பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் அங்கம் வகிக்கும் தேசிய ஜனநாயக கூட்டணியில் (என்.டி.ஏ) அ.ம.மு.க. இணைந்தது. இந்தக் கூட்டணி அண்மையில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் அ.ம.மு.கவின் முன்னாள் துணை பொதுச் செயலாளர் மாணிக்கராஜா தி.மு.கவில் இணைந்துள்ளார்.



"அ.ம.மு.க. எதற்காக தொடங்கப்பட்டது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். சுமார் 8 ஆண்டுகால கடின உழைப்பு இதன் பின்னணியில் உள்ளது. ஆனால், மீண்டும் பழைய நிலைக்கே ஆதரவு என்ற நிலைப்பாட்டை தலைமை எடுத்துள்ளது. இதற்கு கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதை பலமுறை எடுத்துச் சொல்லியும் பலன் கிடைக்காத நிலையில் நல்லாட்சி வழங்கி வரும் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.கவில் இணைத்துள்ளோம்.

தி.மு.க. எங்கள் தாய் கழகம். எதிர்வரும் தேர்தலில் அ.தி.மு.க. மற்றும் அமமுக இணைந்து பணியாற்ற வாய்ப்பு இல்லை." என்று மாணிக்கராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

# கிரீன்லாந்து தீவு விவகாரம் எங்களுக்கு தேவையற்றது

## ரஷ்ய ஜனாதிபதி புடின் கருத்து



கிரீன்லாந்து விவகாரம் எங்களுக்கு தேவையற்ற விஷயம் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடான டென்மார்க் ஆட்சி அதிகாரத்தின் கீழ் கிரீன்லாந்து உள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக கிரீன்லாந்து தீவை அமெரிக்காவுக்கு வழங்க வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்து வருகிறார். மேலும், கிரீன்லாந்தில் வாழும் சுமார் 57 ஆயிரம் மக்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்சம் டொலர் வழங்குவேன் என்றும் ட்ரம்ப் கூறினார்.

இதற்கு டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ட்ரம்ப்பின் அறிவிப்பை அடுத்து கிரீன்லாந்தில் டென்மார்க் அரசு படைகளை குவித்து கண்காணித்து வருகிறது. இதற்கிடையில் ட்ரம்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கிரீன்லாந்து மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம் மாஸ்கோவில் நேற்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு புடின் அளித்த பதில் வழங்குகையில்,

"கிரீன்லாந்து பகுதியை ஒரு காலனியாகவே டென்மார்க் நிர்வகித்து வருகிறது. அப்பகுதி மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டு உள்ளன.

எந்த காரணத்துக்காகவும் நாங்கள் கிரீன்லாந்தை உரிமம் கொண்டாட மாட்டோம். இது எங்களுக்கு தேவையில்லாத விஷயம். இந்த பிரச்சினையை அவர்களே (அமெரிக்கா, டென்மார்க்) தீர்த்து கொள்வார்கள்." என்று தெரிவித்துள்ளார்.






# குரோஷியாவில் இந்திய தூதரகம் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல்

## இந்திய வெளியுறவுத்துறை கண்டனம்

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான குரோஷியாவில் அமைந்துள்ள இந்திய தூதரகத்தின் மீது காலிஸ்தான் ஆதரவு பிரிவினைவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது. இதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் நேற்று வியாழக்கிழமை குரோஷியா தலைநகரான ஸாகிரேப்பில் உள்ள இந்திய தூதரகத்தின் மீது நடந்துள்ளது. சம்பவத்தன்று அத்துமீறி இந்திய தூதரகத்துக்குள் நுழைந்த காலிஸ்தான் ஆதரவாளர்கள் சிலர், அங்கு தாக்குதல் நடத்தி உள்ளனர். தொடர்ந்து அங்கிருந்த இந்திய தேசிய கொடியினை அவர்கள் அகற்றியுள்ளனர்.

"இந்தியாவுக்கு எதிராக செயல்படும் சிலர், குரோஷியாவில் அமைந்துள்ள எங்கள் தூதரகத்தின் உள்ளே அத்துமீறி நுழைந்து, தாக்குதல் நடத்தி உள்ளனர். இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். இந்த சம்பவத்தை குரோஷிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம். இதற்கு காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென புதுடில்லி மற்றும் ஸாகிரேப்பில் உள்ள குரோஷியா அதிகாரிகளிடத்தில் வலியுறுத்தி உள்ளோம்.

இது மாதிரியான செயல்கள் தாக்குதல் மேற்கொண்டவர்கள் பின்னணியை எடுத்துரைக்கும் வகையில் உள்ளது. நிச்சயம் இது சட்ட ரீதியான நடவடிக்கைக்குள் அவர்களை உட்படுத்தும்." என வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.



# ஈரான் போராட்டத்தில் 3,117 பேர் மரணம்; அரசு தொலைக்காட்சி முதல் முறை தகவல்

ஈரானில் நடைபெற்ற போராட்டத்தில் இதுவரை 3,117 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசு தொலைக்காட்சி முதல் முறையாகத் தெரிவித்துள்ளது.

ஈரானில் அரசுக்கு எதிராக கடந்த 28 ஆம் திகதி தொடங்கிய போராட்டம் கலவரமாக மாறியது.


குறிப்பாக ஹிஜாப் அணிவது உட்பட பல கட்டுப்பாடுகளை எதிர்த்து ஆயிரக்கணக்கான பெண்கள் போராட்டத்தில் இறங்கினர். இதில் 5,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என அமெரிக்காவை சேர்ந்த மனித உரிமை அமைப்பு குற்றம் சாட்டியது. இதை ஈரான் அரசு மறுத்தது.

இந்நிலையில் போராட்டத்தில் இதுவரை 3,117 பேர் உயிரிழந்துள்ளனர் என ஈரான் அரசு தொலைக்காட்சி முதல் முறையாக கடந்த புதன்கிழமை தகவல் வெளியிட்டது.

ஈரானில் தற்போது போராட்டம் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. எனினும், ஆங்காங்கே போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.













கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 23/01/2026

## எட்மண்டனில் விபத்து; மூதாட்டி உயிரிழப்பு

கனடாவின் எட்மண்டன் நகரின் மத்திய பகுதியில் புதன்கிழமை ஏற்பட்ட வாகன விபத்தில், 78 வயதுடைய ஒரு பெண் உயிரிழந்துள்ளார்.

காலை சுமார் 10.15 மணியளவில் 107 அவென்யூ 02▶



# டொராண்டோவில் கடும் பனிப்பொழிவு; சிறப்பு வானிலை அறிவிப்பு வெளியீடு

**பனிப்பொழிவு காரணமாக டொராண்டோ மற்றும் அதனைச் சுற்றியுள்ள சில பகுதிகளுக்கு சிறப்பு வானிலை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.**

**லேக் ஹ்யூரனிலிருந்து உருவாகும் பனிப்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை வரை நீடிக்கும் என கனடிய சுற்றாடல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது டொராண்டோ, பீல் ரீஜியன் மற்றும் யோர்க் ரீஜியன் பகுதிகளில் 2 முதல் 5 சென்ரி மீற்றர் வரை பனிப்பொழிவு ஏற்படலாம்.**

குறுகிய நேரத்தில் கனமான பனிப் பொழிவு ஏற்படுவதால் பார்வைத் தெளிவு கணிசமாக குறையலாம் என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் தகவலின்படி, இன்று வெள்ளி மற்றும் நாளை சனிக்கிழமைகளில் வெப்ப நிலை இரட்டை இலக்க 'மைனஸ்' நிலைகளிலேயே தொடரும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஞாயிற்றுக்கிழமை கடும் காற்றுக் குளிர்ச்சி மற்றும் குறிப்பிடத்தக்க பனிப்பொழிவு ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.












# அமைதி வாரியத்திலிருந்து கனடாவை நீக்கினார் ட்ரம்ப்

## பிரதமர் கார்னிக்கு கடிதம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், காசா பகுதியில் பல ஆண்டுகளாக நீடித்த மோதலுக்குப் பிறகு மறுசீரமைப்பை மேற்பார்வையிட உருவாக்கப்பட்ட அமெரிக்க தலைமையிலான "அமைதி வாரியம்" குழுவில் இருந்து கனடாவை விலக்கி, பிரதமர் மார்க் கார்னியின் அழைப்பை ரத்து செய்துள்ளார்.

இதனுடன், உலக பொருளாதார மன்றத்தில் கார்னி 'அரசியல் சத்தம்' மட்டுமே எழுப்புகிறார் என்று அமெரிக்க வர்த்தகச் செயலர் ஹோவர்ட் லட்னிக் குற்றம்சாட்டினார்.

இதற்கிடையில், கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பியர் பொய்லியேவ்ரே, "வார்த்தைகள் மட்டும் அல்ல, செயல்கள் தேவை" என்று கூறினார்.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க தலைமையிலான அமைதி வாரியத்தில் சேருமாறு பிரதமர் மார்க் கார்னிக்கு வழங்கப்பட்ட அழைப்பு திரும்பப் பெறப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை இரவு சமூக ஊடகத்தில் பகிரப்பட்டு, கார்னியை நோக்கி எழுதப்பட்ட கடிதத்தில் ட்ரம்ப் இவ்வாறு எழுதியுள்ளார்.

"இதன் மூலம், இதுவரை எப்போதும் இல்லாத அளவில் மிகவும் மரியாதைக்குரிய தலைவர்களின் வாரியமாக இருக்கும் அமைதி வாரியம், கனடா இதில் சேர்வதற்காக உங்களுக்கு வழங்கப்பட்ட அழைப்பை திரும்பப் பெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"இந்த விவகாரத்தில் உங்கள் கவனத்திற்கு நன்றி." என்று அவர் குறிப்பிட்டுள்ளார். .



## எட்மண்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் 115 ஸ்ட்ரீட் சந்திப்புப் பகுதியில் விபத்து நடந்ததாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

தடை செய்யப்பட்ட இடத்தில் வீதியை கடக்க முயன்றபோது, ஜீஎம்சீ ஸவானா ரக வாகனம் அந்த பெண்ணை மோதியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையாக காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர், அங்கு உயிரிழந்தார்.

வாகனத்தை செலுத்திய 76 வயதுடைய ஆணுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், வேகம் அல்லது மதுபானம் விபத்திற்குக் காரணமாக இருக்கலாம் என தற்போது நம்பப்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது இந்த ஆண்டில் எட்மண்டன் நகரில் பதிவான முதல் விபத்து உயிரிழப்பு என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# டொராண்டோவில் பஸ்ஸுக்கு காத்திருந்த பெண்ணுக்கு பாலியல் ரீதியில் துன்புறுத்தல்

## சந்தேகநபர் ஒருவர் கைது



கனடாவின் டொராண்டோ நகரின் எட்டோபிகோ பகுதியில் பெண் ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்திய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிப்லிங் அவென்யூ மற்றும் லேக் ஷோர் புலவர்ட் வெஸ்ட் சந்திப்புப் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

விசாரணையில், பாதிக்கப்பட்ட பெண் ரீ.ரீ.சீ பஸ்ஸுக்காக காத்திருந்த போது, குற்றம்சாட்டப்பட்ட நபர் அவரை அணுகி பாலியல் தாக்குதல் நடத்தினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நேரத்தில் அங்கிருந்த ஒரு ஒருவர் தலையிட்டு உதவியதால், சந்தேகநபர் அந்தப் பகுதியை விட்டு வெளியேறியுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளார்.

விசாரணையின் மூலம், 38 வயதுடைய டெரன்ஸ் ஜேம்ஸ் நூனன் என்பவரை சந்தேகநபராக பொலிஸார் அடையாளம் கண்டனர்.

அவர்மீது பாலியல் தாக்குதல் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், இதே நபரால் பாதிக்கப்பட்ட மற்ற நபர்கள் இருக்கக்கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், குற்றம்சாட்டப்பட்ட நபரின் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாரை அல்லது குற்றத் தகவல் சேவை அமைப்பையோ தொடர்பு கொண்டு அடையாளம் வெளிப்படுத்தாமல் தகவல்களை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# சீன மின்சார வாகனங்களை நிராகரிக்குமாறு ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் கோரிக்கை

சீனாவில் தயாரிக்கப்பட்ட மின்சார வாகனங்களை நிராகரிக்க வேண்டுமென ஒன்டாரியோ முதல்வர் டக் போர்ட் கோரியுள்ளார்.

பிரதமர் மார்க் கார்னி சமீபத்தில் சீனாவுடன் ஒப்பந்தம் செய்த பின்னர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் ஒன்டாரியோவில் உள்ள வாகனத் துறை மீது தீங்கு விளைவிக்கும் எனஅவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், கார்னி முன்கூட்டியே இந்த விடயம் தொடர்பில் ஆலோசிக்கவில்லை என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சீனாவில் தயாரிக்கப்பட்ட மின்சார வாகனங்களை நிராகரிக்கவும் இங்கே வாகனங்களை உருவாக்கும் நிறுவனங்களை ஆதரிக்கவும். இது எளிதானது என போர்ட் தெரிவித்தார்.

கனடாவில் உற்பத்தி நிலையம் கொண்ட கார் நிறுவனங்களை மட்டுமே ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

சீன ஜனாதிபதி சி ஜின்பிங் மற்றும் கார்னி இடையே, கனடா சீனாவுக்கு விதிக்கப்பட்ட 100 வீத சுங்க வரியை குறைத்து, ஆண்டு தோறும் 49,000 மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அதற்கு பதிலாக, சீனா கானோலா மீதான சுங்க வரிகளை குறைத்தது. சீன மின்சார வாகனங்களை அனுமதிப்பதனால் கனடிய வாகன தொழிற்சாலை பணியாளர்கள் பாதிக்கப்படுவர் என போர்ட் குற்றம் சுமத்தியுள்ளார்.